# நீங்கள், “நல்லது, அவர்கள் அம்மனிதனை எலிசாவின் எலும்புகளில் போட்ட போது, அவன் (ஜீவனைப்) பெற்றானே, அதைக் குறித்து என்ன?” என்று கேட்கலாம்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

## 2 இராஜாக்கள் 13:20

எலிசா மரணமடைந்தான்; அவனை அடக்கம்பண்ணினார்கள்; மறுவருஷத்திலே மோவாபியரின் தண்டுகள் தேசத்திலே வந்தது.

## 2 இராஜாக்கள் 13:21

அப்பொழுது அவர்கள், ஒரு மனுஷனை அடக்கம்பண்ணப்போகையில், அந்தத் தண்டைக் கண்டு, அந்த மனுஷனை எலிசாவின் கல்லறையில் போட்டார்கள்; அந்த மனுஷனின் பிரேதம் அதிலே விழுந்து எலிசாவின் எலும்புகளின்மேல் பட்டபோது, அந்த மனுஷன் உயிரடைந்து தன் கால்களை ஊன்றி எழுந்திருந்தான்.

*செய்தி:* **தீர்க்கதரிசியாகிய எலிசா**, அக்டோபர் 2, 1956, சிகாகோ, இல்லினாய்ஸ், அமெரிக்கா

70. இங்கே சமீபத்தில்... இன்றிரவு இங்கேயிருக்கும் என்னுடைய கத்தோலிக்க நண்பர்களிடம் இதை மரியாதையுடன் கூறுகிறேன், நிறைய... என்னுடைய ஜனங்களில் அநேகர் கத்தோலிக்கர்கள் தான். ஆனால் நான் ஒருபோதும் உங்களைப் புண்படுத்தும்படி இதைக் கூறவில்லை. நான் ஒருபோதும் அதற்காக வரவில்லை. நான் உங்களை ஆசீர்வதிக்கவே வந்திருக்கிறேன். உங்கள் மதத்திற்கு விரோதமாக நான் எதையும் கூறவில்லை, நான் இதைக் கூறுகிறேன்: கத்தோலிக்கன் தன்னுடைய போதனைகளுக்கு எவ்வளவு உண்மையாக ஜீவிக்கிறானோ அவ்வளவு உண்மையாக புரட்டஸ்டன்ட் ஜீவித்திருந்தால், நாம் ஒரு வித்தியாசமான உலகத்தைக் கொண்டிருந்திருப்போம். அது சரியே. ஆனால்... அவர்களுக்குப் போதிக்கப்பட்டதை, அவர்கள் விசுவாசிக்கிறார்கள்.

71. ஆனால் சமீபத்தில், வத்திக்கானில், நான் வத்திக்கானைப் பார்க்க அங்கு போனேன். அங்கே சரியாக ரோமிலேயே இரண்டு இரவுகளுக்கான கூட்டம் எனக்கு இருந்தது. அடுத்த நாள், வத்திக்கானிலிருந்து கொஞ்ச தூரத்தில், அவர்கள் வினோதமான ஏதோவொன்றைக் காண என்னை அழைத்துச் சென்றார்கள். அது ஒரு பெரிய சபையாக இருந்தது, அதற்குக் கீழே அடியில், அவர்களுக்கு ஒரு-ஒரு திராட்சைத் தோட்டத்தைப் போன்ற (ஒன்று) இருந்தது அல்லது ஒரு நடவுசெய்யும் இடம் என்று சொல்லலாம்.


72. மடத்துத்துறவிகள் மரிக்கும்போது, அவர்கள் இவர்களை கீழே கொண்டு சென்று, விதைகளை நிலத்தில் நடுவது போன்று, இவர்களை நடுகிறார்கள், அந்த மாமிசம் எலும்பிலிருந்து விழும் மட்டுமாக, அவர்களை அங்கேயே இருக்கும்படி விட்டுவிடுகிறார்கள். பிறகு அவர்கள் அந்த எலும்பை எடுத்து, அதை வழவழப்பாக மெருகேற்றி மின்சார ஒளிவிளக்குகளைப் (light fixtures) பொருத்தி, இடங்களை ஏற்படுத்தி, அந்த மூலையில் மண்டை ஓடுகளை வைக்கிறார்கள். அது அப்படியே வரிசையாக முறையாக வைக்கப்பட்டிருந்தது (packed up), ஓ, அது இந்த கூரையைப்போன்று அவ்வளவு உயரமாக

இருந்தது, துறவிகளுடைய எல்லாவிதமான எலும்புகளும் அங்கேயிருந்தன; அப்போது அங்கேயிருந்த அநேகம், மறுபடி புழுதிக்கு திரும்பிக் கொண்டிருந்தன.

73. ஜனங்களுடைய மூடநம்பிக்கையைக் காணும்போது, அவர்கள் ஏறக்குறைய அவைகளை இரண்டாக தேய்த்துப்போடும் அளவுக்கு அந்த எலும்புகளை அவர்கள் தேய்த்திருந்தார்கள்; சற்றே அவ்விதமான மூடநம்பிக்கைகள். **தேவன் எலும்புகளில் வாசம் பண்ண மாட்டார். தேவன் மனிதகுலத்தில் ஆவியில் தான் வாசம் செய்கிறார்,** மனிதன் மூலமாக இருதயம் துடிக்கும்போது, அந்த இருதயத்தின் துடிப்பில்தான். தேவனுக்கு ஊழியக்காரர்கள் உண்டு.

74. நீங்கள், "நல்லது, அவர்கள் அம்மனிதனை எலிசாவின் எலும்புகளில் போட்ட போது, அவன் (ஜீவனைப்) பெற்றானே, அதைக் குறித்து என்ன?" என்று கேட்கலாம். நல்லது, அது அப்படியே ஒரு நேரமாக இருக்க நேரிட்டது, சரியாக ஒரே நேரத்தில் எதிர்பாராது நிகழ்ந்த சம்பவமாக அது இருந்தது, இருப்பினும் கூட அது அவ்வாறு சம்பவித்தது, ஏனென்றால் இந்த ஜனங்களுக்குப் பின்னால் ஒரு அந்நிய (அயல்நாட்டு) இராணுவப் படை வந்து

கொண்டிருந்தது, அவர்களுக்கு அது தெரியாதிருந்தது.



**அவர்கள் அவனை அங்கே உள்ளே வேண்டுமென்றே போடவில்லை. அந்த இராணுவத்துக்கு தப்பி ஓடும்படியாக, அவர்கள் அவனை அங்கே உள்ளே எறிந்து, அவன் எலிசாவின் எலும்புகளில் மோதினபோது, தேவன் மிகத் துரிதமாக அவனை உயிரோடு எழுப்பினார். அந்த எலும்புகளில் எதுவுமில்லை, எலிசாவோ**

**மகிமையில் இருந்தான்.** ஆமென். **எனவே தேவன் மனிதர்களிடத்தில் தான் வாசம் செய்கிறார்.** ஆமென்.



75. **இப்பொழுது, ஜனங்கள், தாங்கள் இயேசுவைக் காண்பதற்கான ஒரே வழி என்னவென்றால், அவர்கள் அவரை உங்களுக்குள் காணும்போதுதான்** - அவர்கள் உங்களுக்குள் அவரைக் காணும்போதுதான். **கிறிஸ்துவின் ஆவி உங்களுக்குள் வாசம் செய்து, உங்களுடைய நடத்தையை - உங்களுடைய செய்கைகளை அவருடைய ஆவிக்குள்ளாக கீழ்ப்படுத்தும் நிலைக்குள் கொண்டுவருமானால், அது நீங்கள்**

**அவரைப்போன்று நடந்துகொள்ளவும், அவரைப்போன்று பேசவும், அவரைப்போன்று நடக்கவும், அவரைப்போன்று ஜீவிக்கவும் செய்யும்.** பாருங்கள்? **அப்போது ஜனங்கள் இயேசுவை உங்களுக்குள் காண்கிறார்கள்.** அங்கேதான், அந்தப் பழைய பாடல்: *மற்றவர்கள் இயேசுவை உங்களுக்குள் காணட்டும்.*

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதித் திருத்தம் செய்து வெளிவரும்.)*

★★★★★